பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 28 சனிக்கிழமை (12 - 08 - 2000) VALAMPURI ஒலி: 236

15 ஆம், 16 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட

## அபிவிருத்திக்குழுக்கூட்டம்; ஆளுநர் அதிகாரசபைத் தலைவர் வருவர்

அடுத்த வாரம் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன வடக்குக் கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 7ஆயிரம் மெற்றிக்தொன் உணவுடன் புதிய கப்பல் காங்கேசன் வரும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து 7ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு புதிய கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வழமையாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களை எடுத்து வரும் லங்காமுடித்த, இந்துருவலி, ஹெந்தல ஆகிய கப்பல்களில் ஏற்றப்படும் பொருட்களை ஒரே தடவையில் இக்கப்பலில் எடுத்து வரப்பட முடியும் என்றும் தற்பொழுது வரவிருக்கும் கப்பலில் அரிசி, சீனி, பருப்பு, பால்மா வகை வரவிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ)

20 ஆயிரம் பேரைச் சேர்த்து; பிக்குகள் சம்பளத்தின் அரைவாசியை

# யுத்த செலவுக்கு வழங்க முன்வரின் யுத்தத்தைத் தீவிரப்படுத்துவேன்!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சூளுரை

புதிய அரசியல் அமைப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில நிறைவேற்றுவதற்கு மூன்றில்இரண்டுபெரும்பான்மைப்பலம் அரசுக்கு கிடைக்காமையால் அதனை நிறைவேற்ற முடியாது போய் விட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மையை மக்கள் எனக்களிப்பார்களானால் அவர்களின் ஆணையுடன் தேர்தல் முடிந்த ஒரு மாதகாலத்திற்குள் அரசியல் அமைப்பை மாற்றியமைத்து பிரச்சினைக்குத்தீர்வுகாணுவேன்

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசியல் சீர்திருத்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தை அரசியல் அமைப்புச் சபையாக மாற்றி குறுகிய கால அவகாசத்திற்குள் அது தொடர்பாகக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் பகுதியில் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

விமானப்படைக்கென புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட கிபிர் விமானங்கள் நேற்று நாகர் கோயில்மற்றும் சேரதீவுப் பகுதிகளில் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுத் திட்ட விவகாரத்தில் கூட்டணியின் முடிவில்மாற்றமில்லை

★ சிங்கப்பூருக்கு கடத்தப்பட்ட

## பத்து ஐ. தே. கட்சி எம்பிக்களுக்கு அடுதத தேர்தலில் இடமிலலை

கட்சிவிட்டுக் கட்சிதாவி அரசியல் சீர்திருத்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்து விடுவார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இரவோடிரவாக வயிறார உணவு கொடுத்துவிட்டு சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சிகளின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், சிங்கப்பூரில் உல்லாசமாகப்பொழு

# கூட்டணியின் முடிவில் மாற்றமில்லை

## துணைத் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த தீர்வுத்திட்டத்தில் அரசின் தன்மை (சமஷ்டி முறை), வாக்கெடுப்பற்ற வடக்கு-கிழக்கு இணைப்பு, நிலம் சம்பந்தமான பிராந்தியங்களின் அதிகாரம் ஆகியவற்றில் எதுவித மான விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

உணவு கொடுத்துவிட்டு சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சிகளின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், சிங்கப்பூரில் உல்லாசமாகப்பொழுதைப்போக்கி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[8 ஆம் பக்கம் பார்க்க]

# கப்பல் பயணச் சீட்டு இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டு இன்று காலை 9 மணிக்கு வழங்கப்படுமென யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது. ''டி'' இலக்கமுடைய 100 பேருக்கும் முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பஸ் சேவைக்கு பாதுகாப்பு

(வவுனியா)

வவுனியா உள்ளூர் பஸ் சேவை ஆரம்பிப்பதற்கு இராணுவ இணைப்பதிகாரி தமிழ் கட்சிகளின் பாதுகாப்பு உதவி கோரியுள்ளார்.

பஸ்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடிய நிலையில் இராணுவத்தினர் இல்லை என்று தமிழ்க்கட்சிகளிடம் இராணுவ அதிகாரி தெரிவித்துளளார். (வ)

# மடுத்திருப்பதிக்கு ஆறு லொறிகளில் உணவுப்பொருள்

(வவுனியா)

மடுத்தேவாலயத்திற்கு வரும் மக்களின் நன்மை கருதி வவுனியாவில் இருந்து ஆறு லொறிகளில் மடுவுக்கு உணவுப் பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச

[8ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு இராணுவ தளபாடம் விற்பனை செய்ய இந்தியா முடிவு

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்வதற்கு இந்தியா முடிவு செய்துள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை கடற்படையினருக்குத் தேவையான ரோந்துக் கப்பல்கள் உட்பட பல்வேறுபட்ட இராணுவத் தள

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ தொடர்ந்து...

உங்கள் வலம்புரியில்

இன்றைய பலன்

★ திங்கட்கிழமைமுதல்

க. பொ. த (சாதாரண)

மாணவர்களுக்கான

மாதிரி வினா விடை

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

# வவுனியா விமானப்படை விஸ்தரிப்பு படை அதிகாரி தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

வவுனியா விமானப்படை விஸ்தரிப்புக்கு சுவீகரிக்கப்படவிருக்கும் காணிகள் தொடர்பாக நேற்று இராணுவ தலைமையகத்தில் தமிழ்க் கட்சிகள் இராணுவ இணைப்பு அதிகாரி கேணல் அல்விசைச் சந்தித்து பேசியுள்ளன.

இச்சந்திப்பின்போது புளொட், ரெலோ ஈ.பி.டி.பி ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதிகள்கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் பாதுகாப்பு உயர் அதிகாரி காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என்று முன்னர் வழங்கிய உறுதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய SHARP-FAX மெசின் லுமாலா பெண்கள் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு; தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-இ. சிவசுப்பிரமணியம், C/O, சண்முகம் பிள்ளை, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

(கி-706)


## தொலைக் கல்வி ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சிபெற்றுஇறுதிப்பரீட்சை வரை தோற்றி இற்றைவரை சான்றிதழ்கள் பெறாத ஆசிரியர்கள் பின்வரும் விபரங்களை தவறாது நிரற்படுத்தி பிராந்திய கற்கை நெறிக்கு பொறுப்பான சிரேஷ்ட போதனாசிரியரால் உறுதிப் படுத்தி க. இராசதுரை தலைவர், வடமாகாண அதிபர் சங்கம், யாழ்: மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேரிலோ, தபாலிலோ சேர்ப்பிக்கவும். பதிவாளர் சுட்டெண் முழுப் பெயர் ஆங்கிலத்தில் கற்பிக்கும் பாடசாலை கற்கைநெறி பகுதி 1, 2, சித்தியடைந்த வருடங்கள் பயிற்சி நிலையமும் இலக்கமும்.

## லாம்புகள் விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கட்டுடை முகாமிலுள்ள 82 குடும்பங்களுக்கு யுனி செவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த லாம்புகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினரால் அண்மையில் அக் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (த-120)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ்: குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 152903 ஏ | 152903 பி |
| 152903 சி | 152903 டி |
| 152903 ஈ | 152960 ஏ |
| 153035 ஏ | 153035 பி |
| 154062 ஏ | 154100 ஏ |
| 154106 ஏ | 154107 ஏ |
| 154250 ஏ | 156236 ஏ |
| 156236 பி | 156276 ஏ |
| 156312 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 141171 ஏ | 141171 பி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 141056 ஏ | 141056 பி |
| 141056 சி | 124933 ஏ |
| 124933 பி | 124933 இ |
| 144498 ஏ | 144498 பி |
| 144498 சி | 144498 டி |
| 144498 ஈ | 144516 ஏ |
| 144516 பி | 144570 ஏ |
| 144570 பி | 144635 ஏ |
| 144635 பி | 144635 சி |
| 149846 ஏ | 149847 ஏ |
| 149847 பி | 149847 இ |
| 149936 ஏ | 149936 பி |
| 149936 சி | 149936 டி |
| 149936 ஈ | 149995 ஏ |
| 149995 பி | 149996 ஏ |
| 150058 ஏ | 150058 பி |
| 150058 சி | 150286 ஏ |
| 150286 பி | 150286 சி |
| 150297 ஏ | 150297 பி |
| 150297 சி | 150305 ஏ |
| 150305 பி | 150305 சி |
| 150305 டி | 150305 ஈ |
| 152304 ஏ | 152399 ஏ |
| 152420 ஏ | 152420 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 144911 ஏ | 144911 பி |
| 144914 ஏ | 144916 ஏ |
| 144920 ஏ | 144920 பி |
| 144920 சி | 144945 ஏ |
| 144945 பி | 145484 ஏ |
| 150881 ஏ | 1507881 பி |
| 150882 ஏ | 152788 ஏ |
| 152788 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 123080 ஏ | 123080 பி |
| 123080 சி | 123080 டி |
| 123080 ஈ | 123080 எவ் |
| 123080 ஜி | 136847 ஏ |
| 136848 ஏ | 141042 ஏ |
| 144792 ஏ | 144793 ஏ |
| 144794 ஏ | 144795 ஏ |
| 114819 ஏ | 144819 பி |
| 144832 ஏ | 144839 ஏ |
| 144846 ஏ | 144846 பி |
| 144850 ஏ | 144850 பி |
| 144851 ஏ | 144851 பி |
| 144851 சி | 144912 ஏ |
| 144912 பி | 144912 சி |
| 144942 ஏ | 144942 பி |
| 145326 ஏ | 145465 ஏ |
| 145467 ஏ | 145477 ஏ |
| 145566 ஏ | 145586 ஏ |
| 145604 ஏ | 146633 ஏ |
| 145644 ஏ | 145647 ஏ |
| 145670 ஏ | 145730 ஏ |
| 149835 ஏ | 149835 பி |
| 149835 சி | 149835 டி |
| 149835 ஈ | 150095 ஏ |
| 150095 பி | 150095 சி |
| 153789 ஏ | 152789 பி |
| 152789 சி | 154210 ஏ |
| 156208 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 140900 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 134259 ஏ | 134259 பி |
| 134259 சி | 144937 ஏ |
| 144937 பி | 144937 சி |
| 144962 ஏ | 144962 பி |


(த-நா)

## இலவச மருத்துவ முகாம்

கொக்கிவில் லயன்ஸ் சழகமும் தீவக லயன்ஸ் சழகமும் இணைந்து, தீவகத்திற்கான இலவச மருத்துவ கண் பரிசோதனை முகாமினை புளியங் கூடல் நெசவு சாலை மண்டபத்தில் எதிர்வரும்' இங் கட்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை நடத்தவுள்ளது.

இப் பரிசோதனை முகாமில் இரத்தஅழுத்தப்பரிசோதனை நீரிழிவுப் பரிசோதனை, குழந்தைகளுக்கான வைத்திய பரிசோதனை, பொது வைத்திய பரிசோதனையும் நடைபெறவுள்ளது. (செ)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தம்பு தர்மலிங்கம

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1927-04-12 | 2000- 07-13 |

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்புத் தெய்வமாய் எம்மை வழி நடத்தி
நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(கி-709)


# ஹற்றன் நஷனல் வங்கி
# நிலையான வைப்புக்கள்

இலங்கையின் முன்னணி தனியார் வர்த்தக வங்கியிடமிருந்து
வளமான முதலீட்டுக்குப் பொன்னான வாய்ப்பு

நீங்கள் பெறக்கூடிய **மிகக் கூடுதலான** வட்டி வீதங்கள்

நிலையான வைப்புக்கள் (குறைந்தபட்ச வைப்பு - ரூபா 5000)

ஆண்டுக்கு - 12 வீதம் மாதாந்தம் - 11 வீதம்

அறிமுகம்: **13·5%** மூன்று வருட நிலையான வைப்புக்கள்

(குறைந்த பட்ச வைப்புத் தொகை-ரூபா 50,000)

வட்டி பின்வருமாறு வழங்கப்படும்.

முதிர்ச்சியடைந்ததும் - ஆண்டுக்கு 13 . 5 வீதம் மாதாந்தம் - ஆண்டுக்கு 11 . 25வீதம்
அரையாண்டு ரீதியில் - ஆண்டுக்கு 11 . 75 வீதம் வருடாந்தம் - ஆண்டுக்கு 12 .00வீதம்

மேலதிக விபரங்களுக்கு: ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளருடன் தொடர்பு கொள்க.

**ஹற்றன் நஷனல் வங்கி** உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.

(கி-704)

# கடந்த 7 மாதகாலமாக வேலையற்று இருக்கும் எமக்கு பதிலெதுவுமில்லை

## டக்ளஸ் எம். பிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் மார்கழி மாதத்திலிருந்து எமது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டோம். ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் எமக்கு எதுவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர் சங்கம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாம் பலமுறைகள் தங்களுடன் கடித மூலமும், தங்களது கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது பிரச்சினைகள் தொடர்ச்சியாக வெளிக்காட்டி வந்துள்ளோம். அத்துடன் காலத்துக்கு காலம் மாற்றமுற்று வந்துள்ள ஒவ்வொரு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் எமது பிரச்சினையைகடிதம்மூலமும் நேரடியாகவும் தெரியப்படுத்தி வந்துள்ளோம்.

எமக்கு இக் கணக்காய்வு வேலைத் திட்டத்தை வழங்கும் போது இருந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சண்முகலிங்கம் அவர்கள் தொடர்ச்சியாக இவ் வேலை வாய்ப்பை வழங்குவதாக தெரிவித்த உறுதிமொழியின் பிரகாரம் நாம் வேறு எந்தவொரு வேலை வாய்ப்புக்கும் விண்ணப்பிக்காது இருந்துள்ளோம்.

தொடர்ச்சியாக இரு வருடங்கள் பணிபுரிந்து வந்த எமக்கு இவ் வேலை இடைநிறுத்தல் மூலம் வருமானத்தை இழந்ததோடு சமுதாய அந்தஸ்தினையும் இழந்துவிரக்தியுற்றுள்ளோம்.

தாங்கள் எமது நிலையை உணர்ந்து எமது நியமனம் தொடர்பாக உடனடித் தீர்வை எடுப்பீர்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

மேற் கண்டவாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## யாழ். மாநகர சபைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் மேற்கொண்ட வேலைத் திட்ட விபரங்கள் வருமாறு.

குருநகர் 3ஆம் குறுக்குத் தெரு, குருநகர் 1ம்குறுக்குத் தெரு, இராஜசிங்கம் வீதி பகுதி தாரிடல், கெனடி வீதி மறுதாரிடல், இராமநாதன் வீதி பொதுக் கிணறு திருத்தம், கொட்டடி சீனிவாசப் வீதி சனசமூகநிலையம், இராஜசிங்கம் வீதி சிறுவர் பூங்கா இருநகர், வில்லூன்றி கவி பாரதி சனசமூக நிலையம் கொட்டடி, பருத்தித்துறை வீதி 2ம் ஒழுங்கை கல்வெட்டு, பருத்தித்துறை வீதி 2ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி 3ம் ஒழுங்கை மறுதாரிடல், புதிய பூங்கா வீதி குருநகர் மறுதாரிடல், கில்னர் ஒழுங்கை தாரிடல் கழிவு நீர் வடிகால் அமைப்பு, பூங்கா வீதி தாரிடல் குருநகர், அத்தியடி வீதி கோயில் வீதி கல்வெட்டு. (க)

## பிரபல பத்திரிகையாளருக்கு திருமலையில் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசியரீதியில் சிறந்த பத்திரிகையாளர் விருதுபெற்ற மூத்த பத்திரிகையாளரான எஸ் குருநாதரை பாராட்டும் வகையில் அண்மையில் திருமலை நகர மண்டபத்தில் விழா ஒன்று நடத்தப்பட்டது.

திருமலை பத்திரகாளி அம்மன் ஆலய பிரதமகுரு வி. ரவிச்சந்திரசர்மா பத்திரிகையாளரின் பணியைப் பாராட்டி பொற்கிழி வழங்கினார்.

தற்போது தின குரலின் திருமலை பிராந்திய விசேட நிருபராக கடமையாற்றும் இவர் யாழ்நகரில் நிலவிய போர்க்காலச் சூழ்நிலைகளின் மத்தியிலும் சிறந்த முறையில் பத்திரிகைப்பணி புரிந்தமையைப் பாராட்டி விழாவில் கலந்து கொண்ட பலரும் விதந்து போற்றினர்.

பிரபல சட்டத்தரணி கா.சிவபாலன், பிரபல விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன், பிரபல அறிவிப்பாளர் கமலினி செல்வராஜன் உட்பட பிரமுகர் பலரும் இவ் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-க)

## தீவுப்பகுதி மீனவர் காலை 3 மணிதொடக்கம் மீன்பிடிக்க கடற்படை அனுமதி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மீனவர்கள் அதிகாலை மூன்று மணிதொடக்கம் கரையில் இருந்து இரண்டு கிலோமீற்றர் வரையான தூரத்தில் மீன் பிடிக்கலாமென தீவுப்பகுதி கடற்படை அனுமதி வழங்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அண்மையில் கடற்படை அதிகாரியை ஈ.பி.டி.பி. தூதுக் குழுவினர் சந்தித்த பின்பே இம் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ச. தொ. ச ஊழியர்கள் 39 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

ச தொ. ச நிறுவனத்தில் அமைய ஊழியர்களாக கடமையாற்றிய 39 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம் கிடைக்கவுள்ளது.

மேற்படி அமைய ஊழியர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தப்பட்ட பணிப்புரை கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்றதாக நம்பகமான தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-3)

## சட்டவிரோதமாகக் கசிப்புவைத்திருந்த பெண்ணிற்கு 7 ஆயிரம் ரூபா அபராதம்

(புலோலி)

வைக்கப்பட்ட 4 மாதகடூழி

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர் சங்க அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு இடம் பெற உள்ளது.

யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவு சபை மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கு இடம்பெறுகிறது. (க)

## வலுவிழந்தோருக்கு விரைவில் உதவி

(வலிகாமம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயர் பிரிவிலுள்ள வலுவிழந்தோருக்கு தேவையான பொருட்கள் சிலவற்றை சமூக நலத்துறைத் திணைக்களத்தினர் வழங்கவுள்ளனர்.

ஊன்றுகோல், காதுகேட்கும் கருவி, முச்சக்கர வண்டி சக்கர நாற்காலி, வெள்ளைப் பிரம்பு, மூக்குக் கண்ணாடி என்பனவழங்கப்படவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர்

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ஈ. பி. டி. பி யினர் உதவி

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால அனர்த்தங்கள் காரணமாக சாவகச்சேரி, பளை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் அல்லாத பாவனைப் பொருட்கள் ஈ.பி.டி.பி யினரால் வழங்கப்பட்டது.

கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, வல்வெட்டித்துறை திருவில் முகாம்கம்பகமலை கலைவாணி சனசமூக நிலையம் மற்றும் தேவரையாளி, துன்னாலை, கட்டைவேலி திரு இருதயக்கல்லூரி, ஞானசாரியார் பாடசாலை ஆகியமுகாங்களில்தங்கியுள்ள குடும்பங்களுக்கே சமயல்பாத்திரங்கள், பாய்கள், வாளிகள் என்பன வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வல்லிபுரம் நடராசாவின் தலைமையில் சென்ற ஈ. பி. டி. பி குழுவினராலேயே இப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-2)

## தபால் சேவகர்களின் தனிப்பட்ட கோவைகள் கைதடியில் கைவிடப்பட்டன

(தென்மராட்சி)

கைதடி சந்திக்கு அருகில் இயங்கிய கைதடி தபால் அலுவலகத்தில் அங்கு கடமையாற்றிய பன்னிரெண்டு தபால் சேவகர்களின் தனிப்பட்ட கோவைகளும் வேறு முக்கிய ஆவணங்களும் கைவிடப்பட்டு வரப்பட்டதாக அறியப்படுகின்றது.

இத் தபால் சேவகர்களின் தனிப்பட்ட கோவைகள் இல்லாமையினால் இவ் ஊழியர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் பெறமுடியாதுள்ளதாக அறியப்படுகின்றது.

கைதடி தபாலகம்தற்போது கோப்பாய் தபாலகத்தில் இயங்கிவருகின்றது. (க-77)

## வரணியில் தற்காலிகமாகச் செயற்படும் தென்மராட்சி பிரதேச செயலகம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகம் அதன் தற்காலிக பணிமனை ஒன்றினை வரணியில் ஆரம்பித்துள்ளது. தென்மராட்சி பிரதேச செயலகத்

தற்போதைய நெருக்கடி நிலையில் அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தென்மராட்சி

# பெண்ணிற்கு 7 ஆயிரம் ரூபா அபராதம்

(புலோலி)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவருக்கு பருத்தித்துறை பதில் நீதவான் ஏ.கே. நடராஜா, 7.000 ரூபா அபராதமும் அபராதத்தைச் செலுத்தத்தவறின் 4 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 3 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 4 மாதகடூழியச்சிறைத்தண்டனையும் விதித்தார்.

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த கனகலிங்கம் கோகிலவதனி என்பவரே சட்டவிரோதகசிப்பு வைத்திருந்தமைக்காக பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவராவார். (க-5

சக்கர நாற்காலி, வெள்ளைப் பிரம்பு, மூக்குக் கண்ணாடி என்பனவழங்கப்படவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வலுவிழந்தோர் தமது கிராம அலுவலரிடம் இதற்கான விண்ணப்பத்தையும்வைத்திய அறிக்கையும் சமர்ப்பித்து தேவையான உபகரணங்களைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள். (த-24)

செயலகம் அதன் தற்காலிக பணிமனை ஒன்றினை வரணியில் ஆரம்பித்துள்ளது. தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான கிராம சேவையாளர்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமப் பிரதேசங்களிலேயே தமது இருப்பிடங்களையும் செயற்படும் பணிமனைகளையும் தற்போதையஇடங்களில்ஏற்பாடு செய்துள்ளமையால், தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான கிராம சேவையாளர்கள் வாரத்தில் ஒரு தடவையோ இருதடவையோ வரணிக்குச் சென்று வருகின்றனர்.

ஆயினும் குறித்த பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது தேவைகள், பிரச்சினைகளுக்கு தமது கிராம சேவையாளர்களைச் சந்தித்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுவதாக பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

பொதுமக்கள் கூடுதலாக இருக்கக் கூடிய பிரிவில் பிரதேச செயலகத்தின் உப பணிமனையை அமைக்காது பொதுமக்கள் குறைவாக வாழ்கின்ற வரணிப் பிரதேசத்தில் அமைத்ததால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களையும், அசௌகரியங்களையும்

டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தென்மராட்சி கிழக்கில் இடம் பெயராத நிலையில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களின் சமூக பொருளாதார - சுகாதார - கல்வி- போக்குவரத்து மற்றும் தொழில் வாய்ப்புகள் போன்ற விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(க-77)

### வடக்கு-கிழக்கு மாகாண

# எழுதுநர் நியமனம் கிடைக்காதவருக்கு உடன் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 1997 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண சபையினால் எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்தசேவைகளுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றியோரில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல்பெற்றவர்களுக்கு இதுவரையில் நியமனம் வழங்கப்படவில்லை, இதனால் நாம்மிகவும் விரக்தி நிலையில் உள்ளோம்.

எழுதுநர்சேவை தெரிவில் பாதிக்கப்பட்டோர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வடக்கு-கிழக்கில் 150 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது. சில மாவட்டங்களில் 150 இற்கு குறைவான புள்ளிகளை பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது.

குறிப்பாக மன்னார்மாவட்டத்தில் 144 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது;

எனவே இந்த எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியும் இதுவரை நியமனம் கிடைக்கப் பெறாது வேலையற்றிருக்கும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த எமக்கு எமதுமாவட்டத்தையும் வட - கிழக்கின் ஒருமாவட்டமாக கருத்தில் கொண்டு உடன் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# விசர் நாய்க் கடிக்கு சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

விசர் நாய்க்கடிக்கு ஆளான சிறுவன் ஒருவன் அண்மையில் யாழ். போதனா வைத்திய சாலையில் மரணமடைந்தார்.

கம்பர் மலை வல்வெட்டித்துறையைச்சேர்ந்தசிவானந்தராஜா ராகவன் (வயது-13) என்ற சிறுவனே மரணமடைந்தவராவார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் விசர் நாய் கடிக்கு ஆளாகியிருந்த போது ஏ ஆர் வி மருந்து ஏற்றாமையினால்இம்மரணம் நிகழ்ந்துள்ளது;

(த-12)

## தென்மராட்சி கிழக்கில்

# நிர்க்கதி நிலையில் பொதுமக்கள் நிறுவனங்கள் அக்கறையில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் இடம்பெயராத நிலையில் இருக்கின்ற 15க்கு மேற்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வாழ்ந்து வருகின்ற பொது மக்களின் நலன்கள் பற்றி அரச தரப்பினரோ அல்லது சர்வதேச அரசசாரா நிறுவனத்தினரோ எவ்வித கரிசனையும் காட்டவில்லை என பொது மக்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துக்சபையினால் கொடிகாமம் வரை மட்டும் நடாத்தப்படுகின்ற பஸ் சேவைகளினால் மிருசுவில் உசன் விடத்தல் பளை போன்ற பிரிவுகளில் இருக்கின்ற மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்குப் பல அசௌகரியங்களை எதிர் நேக்கிவருகின்றனர்.

கொடிகாமம் வரை நடாத்தப்படும் பஸ் சேவைகளை மிருசுவில் வரையாவது நாடத்துவது பொது மக்களுக்குப் பயன்தரக்கூடியதாக விருக்கும் எனவும் அறியப்படுகின்றது.

அதேசமயம், பளை பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 350க்கு மேற்பட்ட குடும்பங்கள் தென்மராட்சி கிழக்கிலேயே தொடர்ந்து வசித்து வருகின்றன. இக்குடும்பங்கள் தமது மாதாந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் 15 மைல்கள் பிரயாணம் செய்து மந்திகைக்குப் போய் வரவேண்டியுள்ளது.

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அங்கு வாழ்கின்ற இக்குடும்பங்களின் நலனில் அக்கறை கொண்டு ஒரு கூட்டுறவுக்கிளையை ஆரம்பித்தல் வேண்டும் என பளைப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-77)

# நடத்துநர் பதவிக்கு விண்ணப்பித்த மேலும் பலரின் விபரங்கள்

## நேர்முகப் பரீட்சை இன்று

நடத்துநர் பதவிக்கு விண்ணப்பித்து இது வரை சமுகமளிக்காதவர்கள் இன்று சனிக்கிழமை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், கிராம சேவகரின் நற்சான்றிதழ், கல்வி கற்ற பாடசாலை அதிபரின் நற்சான்றுப் பத்திரம் ஆகியவற்றின் பிரதியுடன் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். தலைமைக் காரியாலயத்திற்கு சமுகங் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் பின்வருமாறு,

மயில்வாகனம் புவனதாஸ் மட்டுவில் தெற்கு, செல்வராசா ராஜேஸ்வரன் நுணாவில் மேற்கு, செல்வராசா தர்மசிறி சரசாலை வடக்கு, சண்முகராசா சிறீக்குமரன் கச்சாய் வீதி சாவகச்சேரி, பரமலிங்கம் கஜேந்திரன் மறவன்புலோ மத்தி, சிவஞானரத்தினம் ஜெகவினோதன் முடக்காடு வீதி கரவெட்டி, சின்னராசா முரளீதரன் சிறீ விக்கினேஸ்வரா வீதி அச்சுவேலி தெற்கு, கனகரத்தினம் ஜீவானந்தன் புத்தூர் மேற்கு, சிவரத்தினம் சிவபாலசிங்கம் 16/18, விதான்ஸ் லேன் சுண்டுக்குளி ஜெயராசசேகரம் சிறீதரன் அளவெட்டி தெற்கு.

யேசுதாசன் ஜெயக்குமார் 114, சூரியவெளி கடற்கரை வீதி நாவாந்துறை, இராசநாயகம் அகிலநாயகம் 256ஏ, வாரைநகர்வீதி நாவாந்துறை,

வீதி யாழ்ப்பாணம், ஜேக்கப் யோன் கியூபேட் 19/4, கடற்கரை வீதி ஈச்சமோட்டை, கிருஸ்ணமூர்த்தி உதயணன் மல்லாமலை கம்பர்மலை உடுப்பிட்டி, தப்பையா சிறீஸ்காந்தராசா கரணவாய் தெற்கு, முத்துத்தம்பி துஷ்யந்தன் சென். செபஸ்தியார் வீதி கோண்டாவில் கிழக்கு,

சுப்பிரமணியம் சுதர்சன் குமரக்கோட்டம் சித்தாவத்தை உடுவில் வடக்கு, கனகசுந்தரம் பிறேமதாஸ் லவ்லேன் உடுவில், தர்மலிங்கம் பாலகிருஸ்ணன் கோப்பாய்தெற்குகோப்பாய், தம்பு சபாரத்தினம் வேரக்கேணி கந்தசாமி கோவிலடி மட்டுவில் தெற்கு, கந்தையா கிருஷ்ணகுமார் சிறீ வல்லிபுரநாதர் கோவில் வீதி கோண்டாவில் கிழக்கு, சின்னக்கோன் சிவமோகன் விடத்தற்பளை மிருசுவில், கந்தையா ஆனந்தவேல் முருகமூர்த்தி கோயிலடி சுதுமலை வடக்கு, திருவானந்திராம் புனிதராஜ் சுதுமலை தெற்கு, தெய்வேந்திரம் புதியராஜா சுதுமலைதெற்கு, மைக்கல் யூட் வில்லவரசிங்கம் மே/பா தகராஜ் பாக்ஸ் லேன் மானிப்பாய்.

காராளப்பிள்ளை தயாபரன் வளர்மதி வாசா ஆனைக்கோட்டை, பாலசுப்பிரமணியம் குகதாசன் பிரதேச செயலக வீதி சண்டிலிப்பாய், தங்கராசா சுரேன் சங்கானை கிழக்கு பண்டத்

## இராசி பலன்

12-8-2000 [ஆடி28, சனி]

திதி-வளர்பிறைத் திரியோதசி

நட்சத்திரம்-பூராடம் பி.ப 7.52 வரை

ராகு காலம்-9.05-10.35 வரை

சுப நேரம்- 3.05-4.35 வரை

சித்தம், சனிப்பிரதோச விரதம்

**மேடம்**
வாக்குவாதம், நோய் வாய்ப்படல், காரியச் சித்திக் குறை,

**இடபம்**
காரிய நன்மை, வீண் அலைச்சல், மனவிரக்தி,

**மிதுனம்**
விருந்துபசாரம், பணவரவு, கோபப்படல்

**கடகம்**
காரிய நன்மை, சந்தோச மிகுதி, சிறுவியாதி

**சிங்கம்**
தேவையற்ற கவலை, அலைச்சல், விரோத உணர்வு

**கன்னி**
உடல் நலசுகம், உறவினர் நம்பிக்கையின்மை, செய் தொழில் விருத்தி

**துலாம்**
குடும்ப சுகம், பணவரவு, காரிய வெற்றி

# மந்திகை அரசினர் வைத்தியசாலையில் தொடரும் புனரமைப்பு பணிகள்

(மந்திகை)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் மீள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக எம். எஸ். எவ். நிறுவன தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் ஜில் தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலையை எம்.எஸ்.எவ். நிறுவனம் இவ்வருடம் பொறுப்பேற்று சத்திரசிகிச்சைப் பிரிவுத் தளபாடங்கள் புனரமைக்கப்பட்டமை, கட்டிடங்களை மீள் புனரமைப்புசெய்கின்றமை உட்பட பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வைத்தியசாலையில் குடிநீர் பிரச்சினையை நீக்கும் பொருட்டு பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களை இணைத்துசீரான நீர் விநியோகத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-2-23)


## இடமாற்றம்

### ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம்

தொல்புரத்தில் இயங்கிவந்த எமது நிறுவனம் பாவனையாளர்களின் நலன் கருதி 07/08/2000 தொடக்கம் இணுவில் வைத்தியசாலையின் (MCLEOD HOSPITAL INUVIL) ஓர் கட்டடத்தொகுதியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகத்தினர்.

(1631)


# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 24.08.2000 முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் கேள்விச் சபையால் திறக்கப்படும். அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விப்பத்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்குப்பிரதேச சபையின் தலைமைச்செயலகத்தில் 22.08.2000 நண்பகல் 12.00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப்பணத்தையும், கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. அத்தாய் தெமிலங்கண்டு வீதி | 250-00 | 1000-00 |
| 2. வல்லியவத்தை வீதி | 250-00 | 1000-00 |
| 3. ஆரவாரப்புல வீதி | 250-00 | 1000-00 |
| 4. கன்பொல்லை வீதி | 250-00 | 1000-00 |
| 5. கலட்டி வீதி | 250-00 | 1000-00 |
| 6. துலாக்கட்டு வீதி | 250-00 | 1000-00 |
| 7. மாடந்தை வீதி | 250-00 | 1000-00 |
| 8. பொன் கந்தையா வீதி | 150-00 | 250-00 |
| 9. யார்க்கரு முதலாம் ஒழுங்கை | 250-00 | 1000-00 |

11[illegible], [illegible] வீதி நாவாந்துறை, இராசநாயகம் அகிலநாயகம் 256ஏ, காரைநகர்வீதி நாவாந்துறை, ஆறுமுகம் யோகலிங்கம்393, கோவில் வீதி நல்லூர், அரிபதுரை அரவிந்தன் பெற்றோல் நிலையம் அருகாமை காங்கேசன்துறை வீதி சுன்னாகம், மதியாபரணம் பிரதீபன் 5/1, ஆனந்தன் வடலி வீதி 3ம் ஒழுங்கை கொழும்புத்துறை, முத்தையா சிறீஸ்கந்தராஜா 185, 2ம் குறுக்கு [illegible] தேச செயலக வீதி சண்டிலிப்பாய், தங்கராசா சுரேன் சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு, சிவசுந்தரம் சத்தியசிவம் சிவநாமவதி சண்டிலிப்பாய் வீதி பண்டத்தரிப்பு, சின்னத்தம்பிறித்தியானந்தன் மாரீசன் கூடல் இளவாலை, சிங்காரவேல் சங்கர் பருத்தியடைப்பு ஊர்காவற்றுறை, வைத்திலிங்கம் ரவீந்திரகுமார் 10-ம் வட்டாரம் நெடுந்தீவு.

## மட்டக்களப்பில் தொடரும் உண்ணாவிரதப்போராட்டம் இருவர் வைத்தியசாலையில்

(மட்டகளப்பு)

மட்டகளப்பில் வேலை அற்ற பட்டதாரிகளின் உண்ணாவிரதப்போராட்டத்தில் மயக்கமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பட்டதாரிகளுள் இருவர் மீண்டும் சாகும் வரையான உண்ணவிரதப்போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இவர்களுடன் இணைந்து மேலும் 5 பெண் பட்டதாரிகள் உட்பட 7பேர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில்ஈடுபட்டுள்ளனர்.

வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நால்வரில் இருவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(க)

## யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பலருக்கு 2ஆயிரம் கொடுப்பனவு

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த ஜே / 82 ஜே / 88 ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையில் யாழ். செயலகமும் பிரதேச செயலகமும் ஈடுபட்டுள்ளது. இதேவேளை அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் நீர்வேலி மற்றும் கோப்பாய்ப் பகுதிகளில் உள்ள சில கிராம சேகவர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் கிடைக்கும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

(க-3)

தொழில் விருத்தி

**துலாம்**

குடும்ப சுகம், பணவரவு, காரிய வெற்றி

**விருச்சிகம்**

வாக்கு வாதம், மனம் தடுமாற்றம், பொருள் நட்டம்

**தனு**

ஆரோக்கியம், குடும்ப நன்மை, துக்கசெய்தி

**மகரம்**

அவலப்படல், தொழில் கஷ்டம், மனப்பயம்

**கும்பம்**

மனச்சந்தோசம், பொருள் வரவு, காரிய நன்மை

**மீனம்**

தொழில் வாய்ப்பு, மனக்கவலை, கடமையுணர்வு.

வளவன்

| | | |
|---|---|---|
| 7. மாட்டநதை வீதி | 250-00 | 1000-00 |
| 8. பொன் கந்தையா வீதி | 150-00 | 250-00 |
| 9. யாழ்க்கரு முதலாம் ஒழுங்கை | 250-00 | 1000-00 |
| 10. மாணிக்கவாசகர் வித்தியாலய வீதி | 150-00 | 250-00 |
| 11. ஒழுங்கைத்தோட்டம் பத்தினி அம்மன்வீதி | 250-00 | 1000-00 |
| 12. அல்வாய் மனோகரா ச. ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 13. கிழவிதோட்டம் ச. ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 14. சர்வோதய ச.ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 15. கம்பர்மலை கலா வாணி ச. ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 16. சமரபாகு நியூட்டன் ச. ச. நிலையம் | 100-00 | 200-00 |
| 17. இராஜாஜி ச. ச. நிலையம் | 250-00 | 1000 00 |
| 18. வட்டுவத்தை ச.ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 19. வல்வெட்டி ச.ச. நிலையம் | 250-00 | 1000-00 |
| 20. வல்வெட்டி ச.ச. நிலையபாலர் பாடசாலை | 250-00 | 1000-00 |
| 21. சுடலை மடம்-வேரொண்டை | 250-00 | 1000-00 |
| 22. சுடலை மடம் வேரக்களி | 250-00 | 1000-00 |
| 23. சுடலை மடம்-ஆலங்கட்டை | 250-00 | 1000-00 |

வ.நடராசா, ஜே. பி
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசபை
கரவெட்டி.

09-08-2000

(கி-707)

## இன்று ஒரு தகவல்

# நேர்மைநெறி தவறாதவன் வாழ்வில் தோல்வியடையான்

ஒரு கிராமத்தில் சிறுவன் ஒருவன் மிகவும் கடவுள் பக்தி வாய்ந்தவனாயும் நேர்மை நிறைந்தவனாயும் வாழ்ந்து வந்தான். அத்துடன் அவன் கல்வி கற்பதிலும் முதல்தர மாணவனாய் இருந்தான். அந்த மாணவனின் பெயர் ஆதவன் என்பதாகும்.

ஒவ்வொரு முறையும் கஷ்டப்பட்டு படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவான். அவனது பாடசாலை மாணவ நண்பர்கள் அவனைப் பெரிதும் மதித்தனர்.

அவன் வகுப்பில் ரவிக்கும், ராமுவுக்கும் அவனைக் கண்டால் மிகவும் பொறாமை, அவனை எப்படியாவது சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என்பது ஆசை. அந்த வகுப்பில் ராமமூர்த்தி என்பவர் ஆசிரியராக இருந்தார். அவர் ஒரு தடவை பாடம் நடத்தும் போது அதன் பொருள் விளங்காமல் அதை தெளிவு படுத்துவதற்கு மிகவும் சிரமப் பட்டார். அப்பொழுது சுதன் பொருளை ஆசிரியருக்கே விளங்கப்படுத்தி கூறினான் ஆதவன் ஆனால் இவ்வாறு கூறியது ஆசிரியருக்கு பிடிக்கவில்லை. அவன் தனக்கே போதிக்க வந்து விட்டானே என்று கோபம் கொண்டார். குருவை மிஞ்சிய சீடன் ஆகி விட்டானே என்று மனம் கொதித்த ஆசிரியர் அவனுக்கு தீமை செய்யத் துணிந்தார்.

அதற்கேற்றாற் போல் அப்போதுஇறுதித் தேர்வு வந்தது. அப்போது தமது வகுப்பில் உள்ள மாணவர்களிற்கு என்னென்ன கேள்விகள் வருகிறது என்று தெரிவித்தார். ஆதவனிற்கு பேப்பர் அவுட்டாகி விட்டது என்று தெரியும். ஆனால் அவன் அதைப் புறக்கணித்து விட்டு நேர்மையாய் சுயமாய் பாடங்களைப் படிப்பதில் நேரத்தைச் செலவிட்டான்.

பரீட்சை நாள் வந்தது. அப்போது எல்லா மாணவர்களுக்கும் தனித்தனியாக மேசை தரப்பட்டது. அப்போது ரவியும், ராமுவும் பரீட்சைக்கு வரும் வினாக்களிற்கு விடையெழுதி அதை ஆதவனின் மேசைக்குள் வைத்துவிட்டனர் இது ஆசிரியர் ராமமூர்த்திக்கும் தெரியும். ஆனால் அவர் இவ்வாறு வந்து மேசைமுன்னால் உட்காந்தான் - அப்போது தலைமையாசிரியர் யாராவது பார்த்து எழுதுகிறார்களா என்று கவனித்துக் கொண்டேவந்தார். ஒவ்வொரு மேசையாக பார்த்துக்கொண்டுவந்தபோது ஆதவன் மேசையில் பார்த்து எழுதும் குறிப்புகள் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தக்குறிப்புகளைக்கண்டு தலைமையாசிரியர் மிகவும் கோபம்கொண்டார். உடனே ஆதவனைப்பரீட்சை எழுதக்கூடாது என்று பரீட்சைஅறையை விட்டு வெளியேற்றினார்.

ஆசிரியர் ராமமூர்த்திக்கு பரமதிருப்தி. ஆதவன்மிகவும் கவலைகொண்டான், 'நான் நன்றாகப்படித்தும் தன்னை இப்படிச்செய்து விட்டனரே? நான் படித்து என்ன பிரயோசனம்' என்று நினைத்து அழுதுகொண்டே இறந்து விடவேண்டும் என்று தீர்மானித்தான். இறப்பதற்கு தீர்மானித்தஆதவன் எப்படி நான் இறக்கமுடியும் என்று யோசித்தான்.

இறுதியில் ரயில்வரும் போது தண்டவாளத்தின் குறுக்கேபடுத்து உயிரை விடுவதுஎன்று முடிவெடுத்தான் ஆதவன்- பின்னர் தண்டவாளத்தினருகேசென்றபோது அங்கு தண்டவாளம் வெட்டப்பட்டு பிளவுண்டிருந்தது.

ஐயோ ரயில்வந்தால் கவிழ்ந்து விடுமே! நான் ஒருவன் இறந்தால் யாருக்கும் நஷ்டமில்லை. ரயில் பயணிகள் இறந்துவிட்டால் எவ்வளவு கஷ்டம்என்று முடிவு செய்து தன்கையைக் கீறி அதில்வரும் ரத்தத்தை தன் சட்டையில்துடைத்து அந்த துணியைகாட்டி கையை ஆட்டிக்கொண்டே வண்டிவரும் பாதையில் ஓடினான் இதனால் ரயில்விபத்து தடுக்கப் பட்டது. அனைவரும் ஆதவனைப்பாராட்டி தமது நன்றியைத் தெரிவித்தனர். கல்வியமைச்சரும் அதே ரயிலில் தான் வந்திருந்தார். அவரும் அவனைப்பாராட்டி அவனைப்பற்றிய விபரங்கள் அனைத்தையும் அறிந்து கொண்டார். ராமமூர்த்தி வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

ஆதவனிற்கு அரசாங்கம் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தது.

## தேர்த்திருவிழா

(ஊர்காவற்றுறை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் திங்கட் கிழமையும் நடைபெறவுள்ளது.

(செ-75)

★ ★ ★

(கோப்பாய்)

கோப்பாய் அருள்மிகு பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது. (செ-79)

★ ★ ★

(இணுவில்)

கோண்டாவில்காரைக்கால் அருள்மிகு சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமையும், தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் திங்கட் கிழமையும் நடைபெறவுள்ளது.

(செ-49)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு அருள்மிகு ஐயனார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும், நீர்த்தத் திருவிழா நாளை மறு தினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதேசமயம் மேற்படி ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களுக்கு கரம்பொன் மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் கோவில் அருகாமையிலுள்ள துறைமுகத்தினூடாக படகுச் சேவை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-75)

★ ★ ★

(இணுவில்)

வன்- வடமேற்கு தாவடி அருள்மிகு பேச்சி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத்திருவிழா நாளை ம, தினம் திங்கட் கிழமையும் நடைபெறவுள்ளது.

(செ-49

## பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு))

வட-கிழக்கு மாகாணத்தில் ஆரம்பக் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ஈ. சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு விசேட பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடத்துவதற்கு ஜேர்மன் தொழில் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகவும் கூறினார். (க-த)

## நல்லூரான் திருவடிக்கு - 08



## நல்லூர்க் கந்தன் பாமாலை

நல்லூர் கதிர்காமம் சந்நிதிமா விட்டபுரம்
எல்லாமே ஈழத் திருத்தலங்காண் - நல்லூரே
ஆண்ட தமிழர் பரம்பரையின் அற்புதங்கள்
பூண்ட தல மென்பார் புகழ்ந்து.

செய்யும் தொழில் சிறக்கும் செவ்வேளின் செல்வாக்கால்
எய்தும் பெருமை எழில் கூடும் - மெய்வருத்தத்
தீருந் திருவருளுந் தேங்குவதை நல்லூரிற்
பாருங்கள் பாடிப் பணிந்து.

சி. இராசரத்தினம்.
(இறைமணி)

## எங்கும் முழங்கும் பேரிகையே

பொங்கரவம் போலெந்த
பொல்லாத சூரனையே
சங்கரனார் மைந்தனவன்
சங்காரம் செய்தவிதம்
தங்க மணிக் கரம்சார்
சக்திவேல் சா்றுமடா
எங்கள் துயர்களைய
இனிய வேல் தானிருக்க

சஞ்சல மேன் நெஞ்சே
அஞ்ச லென்ற அபயகரப்
பிஞ்சு முகத் தழகன்
பேரின்பப் பேறுடையான்
வஞ்சகரை வேரறுக்கும்
வடிவேலழகன் வேல்
துஞ்சும்படி பகையைத்
துடைத் தழிக்கும் நிஜமே.

எங்கள் பகை வரெலாம்
எங்கோ மறைந்திடவே
தங்கை மேல் தீயிட்ட
தயவான தத்துவனின்
துங்கமணிச் சுதனின்
துயர்களையும் வேலெங்கள்
பங்க மறுக்கும் பார்சிறக்க
எங்கும் முழங்கும் பேரிகையே.

டிம்பிள் தாரணி. பானுகோபன்.

## விடியலைத் தந்திடு குமரா...

அழுகின்ற குரலுக்கு அபயமளிக்கும் குமரா
அல்லல்களை அறவே களைந்திடு குமரா
அண்டி வந்தோரை அரவணைக்கும் குமரா
அல்லும் பகலும் நினைக்கின்றோம் காத்திடுவாய்!

சேவல் கொடியை துணையாய்க் கொண்ட குமரா
சேமங்கள் பல செய்து காத்த குமரா
தேவர்க்கு ஆபத்தில் உதவிய குமரா
தேசமக்களுக்காய் விடியலைத் தா குமரா!

ஆதவனின் ... வைத்துவிட்டனர் இது ஆசிரியர் ராமமூர்த்திக்கும் தெரியும். ஆனால் அவர் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று ரவியையும் ராமுவையும் தடுக்கவில்லை.

ஆனால் ஆதவனிற்கு இது பற்றி எதுவும்தெரியாது. பரீட்சைச் தினத்தன்று ஆதவன் பரீட்சைஅறைக்கு

ஆதவனிற்கு அரசாங்கம் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தது.

இக்கதை நேர்மைபிறழாது வாழ்பவன் இறுதியில் வெற்றியடைகிறான் என்பதையும் தீமைகள்கூட நன்மையாக மாற்றப்பட்டு விடும் என்பதையும் உணர்த்துகின்றது.

தென்கச்சி சுவாமிநாதன்

ஜேர்மன் தொழில் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகவும் கூறினார். (க-த)

## சடலம் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

இனந் தெரியாத ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் இராணுவத்தினர் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். (ந-7)

தேவர்க்கு ஆபத்தில் உதவிய குமரா!
தேசமக்களுக்காய் விடியலைத் தா குமரா!

- நாகமணி மகேந்திரலிங்கம்.

## நீதிபதி இளஞ்செழியன் வவுனியாவிற்கு இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனதுபதவியை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பொறுப் ஏற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை,

செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை நீதிபதி இளஞ்செழியனே யாழ்ப்பாணம் வந்து மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கூட்டுறவுத் துறை ஊழியரின் சம்பளம் 400 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

கூட்டுறவுத் துறைசார் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடுதலான தொகையாக 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும்.

சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(மானிப்பாய்)

சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. (த-120)

## தேர் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(துன்னாலை)

கரவெட்டி தச்சன்தோப்பு ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் நிர்மாணிப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள மக்களின் ஆதரவில் கிடைக்கப் பெற்ற நிதியும் அவர்களின் உடல் உழைப்பும் ஒருங்கே சேர்ந்து இத்தேர் நிர்மாணப் பணிகள் நடைபெறுகிறது. (த-14)

## தஞ்சமென்று நாடிவரும் அடியவர் வினைதீர்க்கும் முருகன்

தஞ்சமென்று நாடி வரும்
உன்னடியார் வினை போக்கு முருகா
அஞ்சேலென அபயம் தந்து
கருணை முகம் பொலியும் வேலவா
குஞ்சரியார் மருங்கசைய
சுடரொளியார் பவனிவரும் கந்தா
வஞ்சகரின் கொடுமை தனை
கடிந் தெறிய வேலெடுத்து வாராயோ!

நல்லைத் திரு வீதியிலே
அழகு மயிலேறி வலம் வருவோனே
நல்லை நகர் நாடிவரும்
அடியாரின் குறைதீர்க்க வாராயோ!
நல்லை நகர் குமரா முருகா
வெனும் நாமவொலி முழங்க
நல்லனவே தந்துன்
கருணை மழை பொழிந் திடுவாய்!

செழுமை மிகு சொற்றமிழால்
உன் புகழ் பாடி வரும் அடியார்
எழுமையிலும் உன்னருளால்
உனை மறவாது ஏற்றிடுவார்
இம்மையிலும் மறுமையிலும்
மிடிமை நீங்கி வாழ்ந்திடவே
செம்மையுற வரந் தந்தே
அகில மெல்லாம் காத்திடுவாய்!

- "யாழோன்"

## சோழர் கால சிலைகள் கும்பகோணத்தில் கண்டுபிடிப்பு

(கும்பகோணம்)

சோழர் கால பஞ்சலோக விக்கிரகங்கள் கும்பகோணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தொல் பொருளியலாளர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கும்பகோண மாவட்டத்தில் ஏனநல்லூர் வடபாக்கம் கிராமத்தில் ஒருவிவசாயியின் வீட்டின் பின்புறம் தோண்டப்பட்ட பொழுது பஞ்சலோகத்தில் அமைந்த சிலைகளும் மற்றும் பொருட்களும் எடுக்கப்பட்டன.

நடராசர், அம்மன் அனுமன் போன்ற சிலைகளுடன் பூசைக்குரிய பொருட்களும் எடுக்கப்பட்டன.

இந்த விக்கிரகங்கள் அடங்கிய தொகுதிகளை கும்பகோணம் அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது.

(து)

## வீரப்பனின் செய்தியுடன் நக்கீரன் முதல்வர் கருணாநிதியை சந்திப்பார்

(சென்னை)

சந்தனக்கடத்தல் வீரப்பனுடன் பேசச்சென்ற நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் திரும்பியுள்ளார்.

இத்தகவலை நக்கீரன் பத்திரிகை துணைஆசிரியர் ஹர்ஜிதம்செய்தார்.

தமிழ்நாடு முதல்வர் மு. கருணநிதி அவர்களை நக்கீரன் ஆசிரியர் கோபால் விரைவில் சந்திப்பாரென்றும் முதல்வருடன் தான்கொண்டு வந்த வீரப்பன் சம்பந்தமான தகவல்களைச் சொல்லவிருப்பதாகவும் கன்னடநடிகர் டாக்டர் ராஜ்குமார் மறறும் மூவரையும் விடுதலைசெய்யக்கூடியவாய்ப்பு இருப்பதாகவும் நக்கீரன் பத்திரிகைத் துணை ஆசிரியர்வாயிலான செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இற்றைவரை கிடைத்த ஒலிப்பதிவுநாடாச் செய்திகளில் விசேட மாற்றங்கள் எதுவும்இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

### ஹொலிவூட் நடிகை

## எலிஸபெத் ரெய்லர் வைத்தியசாலையில் அனுமதி

(லண்டன்)

பிரபல ஹொலிவூட் நடிகையான எலிஸபெத் ரெய்லர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

68 வயதான எலிஸபெத் ரெய்லர், நியூமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள நிலையில் சென்னாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இவர் 1960, 1966 ஆம் ஆண்டுகளில் சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதினைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

### ரொறன்ரோ கிரிக்கெட் தொடர்

## பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா விளையாட மாட்டாது

(ரொறன்ரோ)

கனடாவில் நடைபெற இருக்கும் சகார கிண்ணத்திற்கான கிரிக்கெட்தொடரில் பாகிஸ்தானுக் கெதிராகவிளையாடுவதில்லை யென்று இந்தியா முடிவு செய்திருக்கிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை பாகிஸ்தான் ஆதரிக்கும் வரையில் இந்தக் கிரிக்கெட் தொடரில் விளையாடப் போவதில்லையென்று இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்றுப் புதுடில்லியில் தெரிவித்தார்.

இத்தொடர்போட்டி அடுத்தமாதம் 9ம்திகதி முதல்17 ஆம்திகதிவரை ரொறண்ரோவில் நடைபெற இருப்பதுஎன்பதுஏற்கனவே தெரிந்ததே.

(து)

### பொதுமக்கள் மீது

## பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் ஒருவர் பலி பலர் படுகாயம்

### காஷ்மீரில் சம்பவம்

(புதுடில்லி)

இந்திய காஷ்மீர் மாநிலத்தில், பொது மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோசத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். 15இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

காஷ்மீர் மாநில ரஜோரி என்னும் இடத்தைச் சேர்ந்த இரு பொது மக்களை, இந்தியப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதனை எதிர்த்து 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் வீதித்தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அங்குவந்த பொலிஸார் வீதித்தடையினைஅகற்றுமாறுகோரிக்கை விடுத்தபோதும், ஆர்ப்பாட்டக்காரர் அதற்கு மறுத்ததாலேயே மேற்படி கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

(உ)

## பவுசர்-பஸ் நேருக்குநேர் மோதல் 21 பேர் பலி; 13 பேர் காயம்

(அல்ஜீயர்ஸ்)

அல்ஜீரியாவில் பஸ் வண்டி ஒன்றும எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசர் ஒன்றும் நேருக்குநேர்மோதிக் கொண்டதில் 21 பேர் உயிரிழந்தனர் 13 பேர் காயமுற்றனர்.

32 ஆயிரம் லீற்றர் எரி பொருளை ஏற்றிச் சென்ற பவுசர் விபத்துக்குள்ளானதாகவும் காயமடைந்தோரில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. (து)

## கடந்த வருடம் மட்டும் 400 நீதிபதிகளை வன்முறையாளர்கள் தாக்கினர்

### ச. மனித உரிமைகள் நிலையம் தெரிவிப்பு

[ஜெனிவா]

உலகில் 50 நாடுகளைச் சேர்ந்த 400 நீதிபதிகள் மற்றும், சட்டத் தரணிகள் வன்முறையாளர்களால் கடந்த வருடம் தாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள் என்று சர்வதேச மனித உரிமைகள் அவதானிப்பு நிலையம் தெரிவிக்கிறது.

இந்த நிலையத்தின் அவதானிப்புக் கணிப் பின்படி கொலம்பியாவிலேயே அதிக அளவு வன்முறைகள் நடந்துள்ளதாகவும் இலங்கையில் இரண்டு முன்னணிச் சட்டத் தரணிகள் இதற்குள்ளானது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(து)

## காஞ்சியில் கலப்பட சீமெந்து ஆலை

(சென்னை)

காஞ்சிபுரம் மாவட்டம் மேட்டுப் பாளயத்தில் கலப்படசீமெந்து ஆலை ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

இது தொடர்பாக காஞ்சிப் பொலிஸார் ஆலையின் தொழில் அதிபரையும் வேறு 11 பேரையும் கைது செய்துள்ளனர்.

[து]

### உலக தரிசனம்

## அமெரிக்கா கவலை

மலேசிய நிதியமைச்சர் அன்வர் இப்ராஹிமிற்கு 9வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமைக்கு அமெரிக்கா கடும் கவலை தெரிவித்துள்ளது.

தவறான பாலியல் தொடர்பு காரணமாக அமைச்சருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க)

## விமானங்கள் மோதல்

அமெரிக்காவில் நியூ புச்சிக்குஅருகே பர்லின்டன் என்றஇடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விமான மோதலில் 10 பேர் பலியாகினர்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரு சிறியவிமானங்களே மோதிஇருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பீஜிங்கில்

## செய்தியாளர் தினமாக நவம்பர் 8 பிரகடனம்

### சீனா அறிவிப்பு

(பீஜிங்)

நவெம்பர் 8 ஆம் திகதியை செய்தியாளர் தினமாக சீனா பிரகடனப்படுத்தியுள்ளது.

நாடு தழுவிய நிலையில் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகள் அரசு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

5 இலட்சத்து 20 ஆயிரம் செய்தியாளர்கள் கலந்து கொள்ளஇருக்கும் இத்தினத்திலே கருத்தரங்குகள் மகாநாடுகள்கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெறஇருக்கிறன.

இதேவேளை மூத்தசெய்தியாளர்கள் கௌரவிக்கப்பட இருப்பதாகவும் சாதனை நிலைநாட்டிய செய்தியாளர்கள் இனங்காணப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்முறையாகச் செய்தியாளர் சங்கத்தினை சீனாவில் ஆரம்பித்த நவம்பர் 8 ஆம்திகதியை அரசு செய்தியாளர் தினமாகப் பிரகடனப் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(து)

## மரணதண்டனை பெற்றவரின் மனைவிக்கு

துள்ளதாகவும் இலங்கையில் இரண்டு முன்னணிச் சட்டத்தரணிகள் இதற்குள்ளானது

பொலிஸார் ஆலையின் தொழில் அதிபரையும் வேறு 11 பேரையும் கைது செய்துள்ளனர். [து]

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரு சிறியவிமானங்களே மோதியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஜம்முகாஷ்மீரில் தீவிரவாதிகளின் குண்டுத்தாக்குதலில்

# 12 பேர் பலி 40 பேர் காயம்

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரின் ஸ்ரீநகரில் நேற்று பிற்பகல்சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் 12பேர் கொல்லப்பட்டார்கள். 45பேருக்குபலத்தகாயம் ஏற்பட்டது.

சாலை ஒன்றில் இந்திய ஸ்ரேட்பாங் கட்டடத்திற்கு வெளியே இந்தக்குண்டு வெடித்தது.

அந்தபகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குஅண்மையில் பயங்கரவாதிகள் கைக்குண்டுவீசித் தாக்கினார்களென்றும் அங்கு பத்திரிகையாளர்களும் பொலிஸாரும் சென்றபொழுது சக்திவாய்ந்தகுண்டு ஒன்று வெடித்ததென்றும் அரச அதிகாரி ஒருவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

இந்தக்குண்டு வெடிப்பில் உதவிப்பொலிஸ் அதிகாரி உட்பட 12பேரும்பத்திரிகைத் துறைப்படப்பிடிப்பாளரும் கொல்லப்பட்டார்கள்.

இத்தாக்குதல் யுத்த நிறுத்தத்தையும் பேச்சையும்முறித்துக் கொண்ட ஹிஸ்புல்முஜாகுதீன் இயக்கத்தினதும் வேறு ஒரு தீவிரவாத இயக்கத்தினதும் செயலென்று கருதப்படுவதாக இந்திய அரசுஅறிவிக்கிறது.

இதை உறுதி செய்வதாய் குண்டுவெடிப்புப் பொறுப்பை ஹிஸ்புல் முஜாகுதீன்இயக்கம் ஏற்றுக் கொண்டது.

இதேவேளை பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த வரத்குமாரும் மற்றும் மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உலக தரிசன அறிவுப் போட்டி (1)

### (மாதாந்தம்)

1. ஜூலை மாத வலம்புரியில் உலக தரிசனப் பகுதியில் வெளிவந்த விடயங்களை உள்ளடக்கியதாக போட்டி அமையும்.
2. வயது வேறுபாடின்றி எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
3. போட்டி விதிகளும் வினாக்களும் 14-8-2000திகதி வலம்புரியில் வெளியிடப்படும்.
4. ஒவ்வொரு மாதமும் வெற்றி பெறுபவர்களுக்கு ஒவ்வொரு பெருந்தாகையாளர்கள் பரிசில்கள் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.
5. முதலாவது போட்டிக்கான பரிசில்களை பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்ப்பாணம்) நிர்வாகத்தினர் வழங்க முன் வந்துள்ளனர்.

பீஜிங்கில்

தக்கது. (து)

## மரணதண்டனை பெற்றவரின் மனைவிக்கு நீதிமன்றம் ஆயுள்தண்டனை வழங்கியது

(பீஜிங்)

சீன நாடாளுமன்ற நிதிக்குழு முன்னாள்துணைத்தலைவரின் மனைவிக்கு பீஜிங் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடத்தல் செய்தல், இலஞ்சம் வாங்கக் கணவனைத் தூண்டியது போன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் அவருக்குரிய அரசியல் உரிமையும் பறிக்கப்படுவதாகவும் நீதி மன்றத் தீர்ப்பின் போது சொல்லப்பட்டது.

அந்தத் தீர்ப்பில் 21 இலட்சம் ரூபா அபராதமும் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே நீதி மன்றம் இவரின் கணவருக்கு கடந்த மாதம் மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(து)

## நல்லபடங்களைத் தயாரிக்க வேண்டும் ஆளுநர் செல்வி பாத்திமா பீபி உரை

(சென்னை)

பாமரமக்களின் மனதில் திரைப்படங்கள் ஏற்படுத்தும் ஆதிக்கத்தைக் கொண்டு நன்னெறிகளை அடிப்படையாகக்கொண்டு திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். என்று தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீபி தெரிவித்தார்.

நேற்று சென்னையில் மாநில திரைப்படத் துறையினருக்கு விருதுவழங்கும்வைபவத்தில் பேசிய ஆளுநர் குழந்தைகளுக்காகத் தயாரிக்கும் படச் சுருளின் எண்ணிக்கை கூட வேண்டும் என்றுகுறிப்பிட்டார்.

இவ்விழாவில் 1998ல் குறைந்த செலவில்தயாரிக்கப்பட்ட 15 திரைப்படங்கள் தயாரித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 இலட்சம் ரூபா பரிசு கொடுக்கப்பட்டது.

1998 ஆண்டுக்கான சிறந்த படங்களுக்கும் கலைஞர்களுக்கும் முதல்வர் மு. கருணாநிதி பரிசில் வழங்கினார்.

1998 சிறந்த படமாக ''நட்புக்காக'' என்ற திரைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறவரிதே ஒப்புரவின் நல்ல பிற - குறள்

# வலம்புரி

## அரசியல் தீர்வொன்றே

அரசியல் தீர்வொன்றை எல்லோரும் ஏற்கத் தயாராகி விட்ட வேளை இது. ஆனால் சபட நாடக மூலம் தெளிவற்ற தீர்வினையே மக்கள் எதிர்க்கின்றனர். கொடுத்த விலைக்கு ஏற்ற தீர்வுகிடைக்கும் வரை யுத்தம் தொடரவே செய்யும். நெஞ்சொன்றுநினைக்க வஞ்சக நாவொன்று பேசும் அரசியல் எந்தக்காலத்திலும் நிலைத்த வரலாறு இல்லை. அதுவரை துன்ப துயரங்களைத் தாங்கலாமென்ற உணர்வு நிலைக்கு மக்கள் வந்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அரைவேக் காட்டுத் தீர்வுகளை ஏற்று இன்னும் ஐம்பது வருடங்கள் பின் தள்ளப்பட்டு பூண்டோடு அழிய விருப்பமில்லைப் போலும்.

யுத்தமென்றால் அழிவு என்பது வெளிப்படையே அத்த யுத்தத்தை நிறுத்த முடியாதா? என்ற பச்சாத்தாபம் எழுகிறது. ஒன்று பட்டு நிற்றல் ஒன்றால் அரச இயந்திரம் ஆட்டங்காணும். அன்று வெளியுலக பார்வை எம மீது ஆழ்ந்துவிழும். உண்மை துலங்கும். உரிமை பெறப்படும். இவற்றை விட்டு பழைகண்ட மண்டுகம் போல் சொந்தச் சுகங்களுக்காக வள வளப்பது வீண் என்பதை உணர வேண்டும்.

பொது நலம் பேணச் சுய நலம் அற வேண்டும். சொல்லிலே மட்டும் சுகம் காணு செயலற்ற சீமான்கள் மலிந்ததால் நாடு தன் நிலை கெட்டு விட்டது ஜன நாயகம் பேசும் நாட்டில் ஏமாற்றுப் பிழைப்புகள் மலிந்து விட்டன. மக்களை விலைக்கு வாங்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. விலைக்கும் வாங்குகிறார்கள் மக்கள் அரசியல்வாதிகளையும் விலைக்கு வாங்குகிறார்கள் சொந்த நலன்களுக்காய்.

காலம் காலமாக செகப்பிரியன் சொன்ன உலக நாடக அரங்கில் நடிக்கிறார்கள். முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். தாங்கள் வாழ்வை உயர்த்திக் கொள்கிறார்கள் ஏழை இருந்த இடத்திலேயே இருக்கிறான். அவனுக்கு விமோசனம் கிடைப்பதென்பது முயற்கொம்பே.

இன்று நாட்டுக்கு வேண்டுவது செயல் திரம். அரசியல் கட்சிகளிடையே அசையாத ஒற்றுமை. ஒரே ஒரு குறிக்கோள், அது தான் மக்கள் நலன்பேணும் நாட்டு நிம்மதி. அந்த நிம்மதிக்காய் வேண்டுகின்ற யுத்த நிறுத்தம்.

அழிவைக் கட்டுப்படுத்த, தடுத்து நிறுத்தி முற்றுப் புள்ளி வைக்க மக்கள் பிரதிநிதிகள் வேற்றுமையை மறந்து ஒன்றுபட வேண்டும்.

அன்புடன் ஆசிரியர்

# தெய்வீக அம்சம் நிறைந்த கலை உணர்வு

# மனிதவாழ்வை மேம்படுத்த வழிவகுக்குமா?

## கட்டுரையாளர் தரும் புதிய விளக்கம்

நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதச் சேர்க்கையினால் உருவாகிய உயிரினங்கள் அனைத்தையுமே ஒரு கணம் மெய்மறக்கச் செய்கின்ற உன்னதமான பொக்கிஷங்களே கலைகள் ஆகும்.

ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும், ஏய உணர்விக்கும் அன்னை சரஸ்வதி தேவியவள், ஒவ்வொரு மனிதருள்ளும் நிறைந்திருப்பதனைப் பலர் உணர்ந்திருப்பதும், உணர்ந்து வருவதும் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

### கலைகளின் உறைவிடம்

ஆலயங்கள் கலைகளின் உறைவிடமாகப் பண்டு தொட்டு இற்றைவரை, எற்றைவரைக்கும் மிளிரவே இயற்கைவிரும்புகின்றது. இயற்கைக்கமைவாக மனிதனும் மனிதனுக்கமைவாகஇயற்கையும் இசைந்து வாழவேண்டிய ஒருபயபக்குவ நிலைக்கு உலகம் தள்ளப்பட்டுள்ளது.

இயற்கையை மதிக்காத மனிதன் உலகினை வென்றதில்லை என்பதனால், மனிதனிலும் பார்க்க இயற்கை ஆட்சியில் மாட்சிபெறுகிறது. இயற்கையினூடாகவே, இறைவன் அறிவு சார்ந்த அனைத்தையும் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கின்றான்,

அவ்வாறான அறிவு சார்ந்த அனைத்திலும், கலைகள் மனோரம்மியமானவையாகும், மேலாக அவை தெய்வீகம் சார்ந்திருப்பதனால் என்றும் நின்று வாழக்கூடியதாகும்.

அவைசார்ந்த ஆத்மாக்களும் நீடித்த ஆயுளோடு வாழக்கூடியனவே, நிச்சயமாக வாழவேண்டும்,

கலைகள் பலவாறாயினும், லலிதகலைகள், அழகியல் கலைகள், முருகியல்கலைகள், நுண்கலைகள், கவின் கலைகள் எனப் போற்றப்படும் சங்கீதம், நடனம், சித்திரம் என்பவையே மனித இனத்திற்கு வேண்டற்பலவாகும். மனிதம் தழைப்பதற்கு ஏற்ற ஊட்டப் பொருட்களும் இவையே ஆகும். கலையில்லாத வாழ்வு நிலையற்ற தொன்றாகும்,

''கலையின்பமே நிலையின்பமாம், கவியின்பமே அமிழ்தின்பமாம்'' என ஆனந்திப்பர் கலைஞர்கள். இறைவன் சில மனிதர்களுக்குக் கலையமுதினைத் தேடிக்கொடுக்கின்றான். சிலருக்கு விரும்பிக் கொடுக்கின்றான், சிலருக்கு கேட்டுக்கொடுக்கின்றான். இத்தகைய நிலைகளில் ஆண்டவன் சந்தோஷப்பட்டதுமுண்டு. கவலைப்பட வைத்ததுமுண்டு. அதே போலச் சமுதாயமும் சந்தோஷப்பட்டதுண்டு, கவலைப்பட்டதுமுண்டு.

தம்மை வருத்தி தளராத முயற்சியோடு, கலையே வடிவமாகி, தம்முருவைத் தெய்வமாக்கி, கலைக்கு விலை பேசாத, காருண்யம் மிக்க உதாரணக் கலைஞர்கள் பலர்வாழ்ந்திருக்கின்றார்கள் வாழ்ந்து வருகின்றார்கள், வாழ்வதற்குப் பிறப்பார்கள். சித்திரக்கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இற்பக் கலைஞர்கள், கிராமியக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் கலைஞர்கள் இவ்வாறு பற்பல கலை விற்பன்னர்கள் இலங்கையின் கலை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளமை வரலாற்று உண்மைகள்.

### கலை வளர்ச்சி

இலங்கையில் கலையானது வளர்ந்துள்ளதா? வளர்கிறதா? தேய்கிறதா? தேயமுடியுமா? வளரமுடியுமா? இது போன்ற வினாக்கள் இப்பொழுது பலரது ஆய்வுகளிலும் தொனிக்கிறது. இந்த வினாக்களுக்கான விடையினைக் காண முயலும் போது தான் பக்குவம் கீற்றெனப் புலப்படும்.

### ஆலய அமைப்பு

முதற்கண் ஆலயங்கள் கலை வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கிறது என்பதனை உணரவும், அறியவும், முடிகிறது. கோபுர அமைப்பு, சிற்ப அமைப்பு, தேர் உருவாக்கல், இசை அரங்குகள், நாதஸ்வர, தவில் கச்சேரிகள், நடன நிகழ்வுகள், பஞ்ச புராணம் ஓதல் போன்ற ஏற்ற காலப்பிரமாணங்களை வகுத்திருக்கின்றான். அதனை எந்த விஞ்ஞான சக்தியும் மாற்ற முடியாது. மாற்றினாலும் கூட நிலைக்காது. எல்லா மனிதர்களையும் வைத்திய கலாநிதிகளாக ஆக்க முடிவதில்லை. எல்லா மனிதர்களையும் பணக்கார வர்க்கமாக ஆக்க முடிவதில்லை. எல்லோரையும் கலைஞர்களாக ஆக்கமுடிவதில்லை. அதே வேளை ஒரு நாட்டின் நற்பிரஜையாக ஆக்க முடிகிறது. இறைவன் பற்பல, வெவ்வேறு மனித வடிவங்களைத் தந்திருக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் தான் சரி என்று எண்ணிக் கொள்கின்றான். தீர்ப்பு இறைவனது கையிலேதானுண்டு இந்த நோக்கிலே இசைக் கலை வளர்ச்சியைப்

**அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா**

இன்னோரன்ன நிகழ்வுகளினால் ஆலயங்கள் தமது பங்களிப்பினை நல்கி வருவது கலைகள் உயிர் பெறுவதற்கு சாதகமாக அமைகிறது எனலாம்.

ஆலயங்களைத்தொடர்ந்து மாணவப் பருவத்தினர் கூடிக் குலாவுகின்ற இடம் பாடசாலைகள். ஒரு மனிதன் தன்னை அறிமுகப்படுத்துகின்ற, தன்னை வளர்க்கின்ற, தான் அறிவு பெறுகின்ற தன் பாடசாலையைப் பெருமைப்படுத்துகின்ற, பாடசாலயால் பெருமை பெறுகின்ற கலைக் கோவில்களில் பயில்கின்ற போதும், உயர் கல்விப் பீடங்களில் நிமிர்கின்ற போதும் பெற்றுக் கொள்கின்றவாய்ப்புக்களும், பெற்றுக்கொள்கின்ற விமர்சனங்களும் அப்பால் கலை சார்ந்த ஆசிரியனாக விளங்கும் போது அவனை பக்தனாகப் பாவித்துப் பாலிக்க எண்ணுகின்ற சந்தர்ப்பங்களுமே நம்மை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுகின்றன.

ஒரு குழந்தை பிறந்த உடனேயே எழுந்து நடப்பதில்லை. எழுந்து நடக்க வேண்டுமென்று யாருமே எதிர்பார்ப்பதில்லை. இறைவன் மனிதனின் வளர்ச்சிக்கு பற்றி ஒரு கணம் சிந்திக்க என் மனம்ஆவல்கொள்கிறது.

தரமான, தகுதியான இசைக் கலைஞர் ஒருவர் யாராக இருந்தாலும் சரி, அக்கலைஞர் தெய்வீக நிலையில் வைத்துக் கணிக்கப்படுகின்ற தன்மையைப் பெறுகின்றார் என்பதில் இரு கருத்துகள் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறான தகுதியான கலைஞரிடத்து வாழுகின்ற சமுதாயம் பல தகைமைகளை எதிர்பார்க்கிறது. எதிர்பார்ப்பதில் தவறு இருப்பதாகவும் தெரியவில்லை. அவ்வாறு எதிர்பார்க்கும் தகைமைகளை இங்கு அவதானிப்போமாக.

★ ஒவ்வொரு கலைஞரிடத்திலும் ''தன்னிடத்தில் காணப்படாத வெவ்வேறு திறமையினை ஆண்டவன் கொடுத்துள்ளான்'' என்பதனை உணர்ந்து உதாரண கலைஞராகத் திகழ்தல்.

★ ஏனைய கலைஞரிடத்திலும் இறைவன் இருக்கின்றான் என்பதனை உணர்ந்து மதிப்பளித்தல் அல்லது வணங்குதல்.

★ தனக்குப் பின்னால் ஒரு சமுதாயம் இருக்கிறது என்பதனை உதாசீனம் செய்யாதிருத்தல்.

★ எல்லோருடைய திறமைகளையும் அங்கீகரிக்கின்ற, வரவேற்கின்ற மனோபாவத்தை நிஜமாகவே வளர்த்துக் கொள்ளல்.

★ மூத்த கலைஞர்களுக்குத் தலை வணங்குதல்,

★ செயன்முறையாகவோ, சாஸ்திர ரீதியாகவோ சாதனை படைப்பதனை வரவேற்றல்.

★ தனக்குக் கீழ் வளரும் பிஞ்சுக்கலைஞர்களுக்கு உற்சாகமூட்டி உயர வழிசமைத்தல் முளையிலே கிள்ளி விடுதல் அல்ல, சந்தர்ப்பமளித்தல்.

★ பாடும் போது சரஸ்வதியையும் பேசும் போது ஆணவத்தையும் கொள்ளாது, பாடுகின்ற போதும் பேசுகின்ற போதும் சரஸ்வதி கடாட்சம் மிக்கதாகத் தொழிற்படல்.

★ இயன்ற அளவு பயனுள்ள பேச்சுக்களை எதிர்கால சந்ததியின் கலாபிவிருத்தி கருதி கலந்துரையாடுதல், கலைஞர்களோடு ஒத்துப் போகுதல்.

மேற் போந்த இன்னோரன்ன விடயங்களில் இசைக்கலை முன்னெடுக்குமாக இருத்தல், வளர்ச்சியை இயற்கையே வெளிக் கொணரும் என்பதில் ஐயமில்லை இந்நிலையில் '' கூரம்பாயினும் வீரியம் பேசேல் ''

என்பது முதுமொழி,

இறைவா! கலை செழித்து வளரவேண்டுமென்று வளரும் சந்ததி ஆவல் கொள்கிறது. எண்பது வயது வரும் போது உணர்ந்து ஒரு பிரயோசனமும் ஆகப் போவதில்லை, தக்க வயதுகளில் இருப்பவர்கள் தழைப்பதற்கு வழி காட்ட வேண்டும். சுருதியும், லயமும் ஒருவருக்கு மட்டும் சொந்தமல்ல. அவை பலருக்கும் உரிய சொத்து. இப்புதாயிரமாண்டில் இசைக் கலைஞர் ஒருவொருவரும் சாதனை படைத்திடுவீர்; வேதனை தர்வித்திடுவோம்; நிற்க அதற்குத் தக;

# கொழும்பு பல்கலை.மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று நண்பகல் தும்முல்லைச் சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவியான சுதர்சினி குணரட்ணம் நேற்று முன்தினம் காலை விபத்துக்குள்ளாகி மரணமாகியதை அடுத்து வாகன சாரதிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவே இவ் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகத் தெரிய வருகிறது.

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்ட மாணவர்கள் தும்முல்லைச் சந்தியில் நின்று சாரதிகளை அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறும் விபத்துக்களைத் தவிர்க்குமாறும் கூறி கோசங்களை எழுப்பினர்.

இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக நீட்மா வத்தையில் வாகன நெருசல் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

(செ)

# திருநெல்வேலி சந்தைப்பகுதியில் அதிகாரிகள் திடீர் வேட்டை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தை மற்றும் அருகில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர்வேட்டையின்போது, மக்கள்பாவனைக்குதவாதபொருட்கள்பலவிற்பனைக்கு வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவை உடனே அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெட்டப்பட்ட உருளைக் கிழங்கு 30 கிலோ, பழுதடைந்த ரின்மீன், பிஸ்கட் வகை, நெல்லிரசம், அயடீன் கலந்த உப்பு, கடலைமா, கச்சான் என்பனவே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

நல்லூர்சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவைச்சேர்ந்த கு. கருணாநிதி. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை சேர்ந்த செ. சவுந்தராசா, கா. சிவனேசகுமார், முருகதாஸ் ஆகியோரே சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாவர்

(ச)

## சாயிபஜனை

மக்கள் நிம்மதியுடன் சுபீட்ச வாழ்வுவாழ இறை ஆசிவேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு சாயிபாபா பஜனை நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு 68/2 வாழ் இராசாவின்தோட்ட வீதியிலுள்ள சமய, சமூக சேவையாளர் லயன்ஸ் நித்தியானந்தன் இல்லத்தில் நடைபெறும்;

(அ)

நூலகத்துறைப் படிப்பகம் 12 - 08 - 2000
நூலகத்துறைப் படிப்பகம்

★ நிவாரணப் பொருளுக்குப் பதிலாக

# பணமாக வழங்குமாறு கோரி வவுனியாவில் உண்ணாவிரதம்!

[வவுனியா]

நிவாரணமாக வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக பணம் வழங்குமாறு கோரி நேற்று வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையமக்கள் உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா பூந்தோட்டம் வேப்பங்குளம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த சுமார் 4ஆயிரம் மக்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஜூன் மாதத்திற்குரிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படாமையினாலும் நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவு தரமற்றதாக இருப்பதாலும் பணமாகத் தரக் கோரியே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் கருத்து தெரிவிக்கையில் நலன்புரி நிலையத்தில் மக்கள் உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு மூலமாக அறிந்து கொண்டதாகவும் நலன்புரி நிலைய மக்களின் நிவாரணம் தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எடுத்த முடிவை அமுல் படுத்துவதாகவும் இதனால் ஏற்படும் கஷ்டங்களை எழுத்துமூலம் தருமாறு நலன்புரி மக்களை அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (வ)

## பத்து ஐ.தே.கட்சி

இந்த பத்து எம்பிக்களும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பே கொழும்பு திரும்ப அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அதுவரை சிங்கப்பூரில் தங்கியிருப்பர் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இரவோடிரவாக சிங்கப்பூருக்குக் கடத்தப்பட்ட பத்து எம்பிக்களுள் ஒருவர் பெண் எம்பி என்பதும் ஏனைய ஒன்பது பேரும் ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த பத்து எம்பிக்களுக்கும் அடுத்த தேர்தலில் ரிக்சற் கிடைக்காது போகலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். [வ]

## யுத்தச் செலவுக்கு...

கலந்துரையாடி சாதாரண பெரும்பான்மை அங்கீகாரத்தைப் பெற்றிருக்க முடியும், அதன் பின் சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆணையைப் பெற்று செயல் படுத்தியிருக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு வார்த்தைக்கு ஆயத்தமாக இருந்தமையால் தான் அதனைச் செய்யவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவை அமுல்படுத்துவது விருப்பமில்லை. இதனால் தான் அவர்கள் அரசியல் யாப்பை எதிர்த்து வந்துள்ளனர். இவர்கள் இருவரது நிலைப்பாடும் உலக நாடுகள் பலவற்றுக்கும் இப்போது தெரிந்து விட்டது.

### 20ஆயிரம் பேர்தேவை

அரசியல் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தபிக்குகளும் இனவாத அமைப்புகளும் போர்க்கொடி தூக்கி இருந்தன இவர்கள் யுத்தத்தை நடத்துமாறு கோரி வருகின்றனர்,

இவர்கள் கூறிவருவது போல் யுத்தத்தை முன்னேடுத்துச் செல்வதற்கு சுமார் 20ஆயிரம்படையினர் தேவை அப்போதுதான் யுத்தத்தை சீராக கொண்டுநடத்த முடியும் இந்நிலையில் இனவாத அமைப்புகளும் யுத்தவாதிகளும் ஆளுக்கு நூறுபேரையாவது பொருக்குத்திரட்டித் தரவேண்டும் இதனை இவர்கள் செய்து தருவார்களா? யுத்தத்திற்கு ஆட்களைத் திரட்டித்தந்தால் அதற்கான ஆயத்தங்களை செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்,

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யாராவது மாற்றுவழி எதனையும் முன்வைப்பார்களேயானால் அதற்கு நாட்டுமக்களின் சம்மதத்தைப்பெற சர்வ ஜன வாக்கெடுப்பிற்கு விடுவேன்;

### புத்த பிக்குகள் சம்பளத்தில் அரைவாசியைத் தருவார்களா?

விடுதலைப்புலிகள் சர்வ மக்களாலும் தெரிவுசெய்யப்பட்டால் அரசின் அமைப்பு சீர்திருத்தத்தைக் கைவிட்டு பதவியிலிருந்து நான் விலகுவேன்; பதவி எனக்கு முக்கியமல்ல. யுத்தத்தின் மூலம் தான் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று புத்த பிக்குகள் விரும்பினால் அவர்களும், அவர்களுடன் சார்ந்திருப்பவர்களும் தமதுமாதச் சம்பளத்தில் அரைவாசியை ஒவ்வொரு மாதமும் யுத்தத்திற்கு தருவார்களேயானால் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில எம்.பிக்கள் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவு அளிக்க முன்வந்தமையால் அவர்களை பலாத்காரமாக சிங்கப்பூருக்கு அனுப்பியுள்ளனர்: இவர்களுக்கு லஞ்சம் கொடுத்துத் தான் அனுப்பினார்களா? என்று தெரியாது. இதற்கு விசாரணை நடத்தினால் எல்லாம் தெரியவரும்

இதேவேளை மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி எனக்கு ஆதரவு தருவார்களானால் ஒரு மாத காலத்திற்குள் அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றி வைப்பேன் என்று கூறினார். (வ)

## தேர்த் திருவிழா பயண வசதி

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதை முன்னிட்டு சகலைப் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்டப்பிரதி அமைப்பாளர் க. மணிபல்லவராஜன் தெரிவித்தார். (ந)

## மடுத்திருப்பதி.---

அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

மன்னார்கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக தேங்காய், மா, சீனி, சவர்க்காரம் போன்ற பொருட்கள் யாத்திரிகர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## அரசியல்---

விடுத்த பத்திரிகை குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்திக்குறிப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

இத் தீர்வுத்திட்டத்திற்கான பாராளுமன்ற வாக்கொடுப்பில் எமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்கவேண்டுமெனவும் எனது தலைமையில் கடந்த 7ந் திகதி நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் எதுவித மாற்றத்திற்கும்இடமில்லை என்பதை வலியுறுத்துவதுடன் எமது கட்சிக்கெதிரான விஷமத்தனமான வதந்திகளை சிலர் திட்டமிட்டுப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து இப்பத்திரிகை அறிக்கையை அனுப்புகின்றேன். எமது கட்சி எடுத்த தீர்மானத்தில் எந்தவித மாற்றத்திற்குமிடமில்லைஎன்பதை உறுதிபடக் கூறுகின்றேன். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இலங்கைக்கு-,-.

பாடகிகளையும் உபகரணங்களையும் விற்பனை செய்வதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# இரண்டு புதிய அமைச்சர்கள்

(கொழும்பு)

புதிய பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பதவி ஏற்றபின் அரசாங்கம் இரண்டு புதிய அமைச்சர்களை நியமித்துள்ளது.

கப்பல்துறை புனர்வாழ்வு துறைமுக பிரதி அமைச்சராக இருந்த ரெஜி ரணதுங்க விமான அமைச்சராகவும் சுற்றுலாத்துறை உள்நாட்டு விமான போக்குவரத்துத் துறை பிரதி அமைச்சராக இருந்த எஸ்.பி. சோமசிங்க சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபென்டியும் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். (வ-7)

# பட்டலந்த சித்திரவதை முகாம் சூத்திரதாரி டக்ளஸ் பீரிசுக்கு பிணை அனுமதி மறுப்பு

(கொழும்பு)

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது.

இவரது பிணை தொடர்பான கோரிக்கையை கம்பகா மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்குமாறு இவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களுக்கு உத்தரவிடப்பட்டது;

இதே வேளை கம்பகா மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது தொடர்ந்தும் டக்ளஸ் பீரிசை தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-2)

# தொண்டர்களைத் தாக்கும் செயல் நல்லூரில் தொடர்கிறது

## தடுக்க இளைஞர் அணி திரள்கிறது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயப் பகுதியில் நேற்றும் இளைஞர்கள் சிலர் வீதித்தடைகளைத் தூக்கி எறிந்ததாகவும் அங்கு கடமையில் இருந்த தொண்டர்களைத் தாக்க முனைந்ததாகவும் தெரியவருகிறது.

குறிப்பிட்ட ஒரு இடத்திலிருந்து வரும் இளைஞர்களே இவ்விதம் நடந்து கொள்வதாகவும், இச் செயல் அத்துமீறிச் செல்வதால் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவதற்கென நல்லூர் ஆலயப் பகுதியைச் சார்ந்த இளைஞர்கள் தயாராக இருப்பதாகவும் தெரியவருகின்றது. (ந)

## வீதி சீரமைப்பு

(அரியாலை)

யாழ்ப்பாண இராமநாதன் வீதி அண்மையில் திருத்தி செப்பனிடப்பட்டுள்ளது.

இதனால் பொது மக்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் நன்மையடைந்துள்ளனர். (த-106)

## ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதம்

(வவுனியா)

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 25 பேர் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர். (வ)

## வவுனியா;.,

மொழி சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக வவுனியாபுளொட் அமைப்பாளர் கே, சந்திரகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (வ)

## கப்பல்.---

னுரிமை பெற்ற ''டி'' இலக்கமுடைய 50 பேருக்கும் பயிற்சிக்காகக் கொழும்பு செல்லும் வங்கி ஊழியர்கள் 50 பேருக்கும் மீளபயணச் சீட்டிற்கு விண்ணப்பித்த 50 பேருக்கும் மற்றும் நேர்முகப் பரீட்சை, மரணச்சடங்கு, ஆகியவற்றிற்குச் செல்வோரில் 50 பேருக்குமென இப்பயணச்சீட்டு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையிலிருந்து புறப்படுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது (ந)

## நாகர் கோவில்--,

விமானத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரம் பற்றி எதுவும் தெரியவில்லை எனவும் அந்நிலையம் அறிவித்துள்ளது.

இதே வேளை யாழ். நகரப் பகுதியில் யுத்த விமானங்கள் தாழப்பறந்து சென்றதையும் காணக் கூடியதாக இருந்தது.

இதே வேளை இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வ வானொலியான புலிகளின் குரல் எதுவித தகவலையும் வெளியிடவில்லை. (ந-7)

## அபிவிருத்திக்...

யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கும்இக்கூட்டத்தில் வடக்குக்கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி. கிருஸ்ணமூர்த்தி மற்றும் மாகாண அமைச்சின்செயலாளர்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சுப்பிரமணிய சர்மா உட்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இதேவேளை இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் யாழ்; மாவட்ட எம். பி; களும் சமுகமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க வடக்குகிழக்குமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவராக நியமனம் பெற்றபின் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதல் தடவையாகும். [வ]

## ஒப்படைக்கவும்

கந்தசாமி ரதீஸ் ஆகிய எனது 801291694 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் 0902015028 விசேட அடையாள அட்டையும் திருநெல்வேலி அம்மன் வீதி பத்திரகாளி கோவிலுக்கும், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து க. ரதீஸ் நாவலடிலேன், அம்பாள் கலையகம், திருநெல்வேலி அல்லது வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் வேண்டுகின்றேன்.

கஜன் திரை
ஊர்காவற்றுறை
விஜயகாந், குஷ்பு
ராதாரவி நடித்த
சிம்மாசனம்
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(இ/652)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
17 ஆம் திகதி வரை
2 வது மாதமாக
காட்சியளிக்கும்
ரஜனிகாந்த்,
சௌந்தர்யா
ரம்யாகிருஷ்ணன்
நடித்த
படையப்பா
(ரீகல்ஸ்)
11.00, 2.30 [பு/நே]
(இ/666)

ஸ்ரீசெல்வா
[யாழ்ப்பாணம்]
விஜயகாந், குஷ்பு,
ராதாரவி நடித்த
சிம்மாசனம்
CD பிரதி (புதியவெளியீடு)
காட்சி நேரம்
10-30, 2-00 (ம/நே)
[இ 688]

இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] நிறுவனத்தாரால் இல: 15, [illegible] யாழ்ப்பாணம்] எனும் விலாசத்தில் அமைந்துள்ள [illegible] அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.